St George's University Hospitals NHS
NHS Foundation Trust

**யூரோகைனகாலஜி துணைச் சிறப்புச் சேவை (Urogynaecology Subspecialty Service) பற்றிய பொதுமக்கள் கலந்தாய்வு**

## 1. அறிமுகம்

செய்ன்ட் ஜார்ஜ்'ஸ் யூனிவர்சிட்டி ஹாஸ்பிட்டல்ஸ் நேஷனல் ஹெல்த் சர்வீஸ் (NHS) ஃபவுண்டேஷன் ட்ரஸ்ட்டால் (SGUH) வழங்கப்படும் யூரோகைனகாலஜி துணைச் சிறப்புச் சேவை திங்கட்கிழமை ஜூன் 8, 2015 முதல் தற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட்டுள்ளது. தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதற்கான காரணங்களையும், எதிர்காலத்தில் எங்களின் நோயாளிகளுக்கு இந்த சேவையை வழங்குவதற்கான முன்மொழிவுகளையும் வரையறுப்பது இந்த அறிக்கையின் நோக்கமாகும்.

## 2. முன்மொழிவிற்கான பின்னணி

யூரோகைனகாலஜி என்பது கூபகத்தள குறைபாட்டைக் கொண்டுள்ள பெண்களைப் பராமரிப்பதற்கான துணைச் சிறப்பு மகளிர் நலவியல் சேவையாகும். SGUH, பெண்களுக்கான சேவைகள் இயக்ககத்தின் ஒரு துணைச் சிறப்பு சேவையாக தீவிர மூன்றாம்கட்ட கன்சல்டன்டான யூரோகைனகாலஜிஸ்ட்டால் வழங்கப்படும் சேவையை அளிக்கிறது.

SGUHல் பின்வரும் நிலைகளுக்கு சிகிச்சையளிக்கப்படுகிறது

இரண்டாம்கட்ட தீவிர நிலைகள்:

- ஆரம்ப சிறுநீரொழுக்கு மற்றும் பிதுக்கம்
- மீண்டும் மீண்டும் ஏற்படும் சிறுநீரொழுக்கு மற்றும் பிதுக்கம்
- மகப்பேறுக்குப் பின் கூபகத்தள பிரச்னைகள் மூன்றாம்கட்ட தீவிர நிலைகள்:
- ஒருங்கிணைந்த கூபகத்தள மருத்துவமனை
- சிக்கலான நீர்ப்பாதையியல்
- நரம்புசார்ந்த நீர்ப்பாதையியல்
- குழந்தைகள் வளர் இளம்பருவ மகளிர் நலவியல்

இந்த சேவையை வழங்குபவர் மற்றும் ஆதரிப்பவர்

1 x மருத்துவமனை தலைமை (முழுநேரம்)
2 x கன்சல்டன்ட்கள் (முழுநேரம்)
1 x துணை நிபுணர் (முழுநேரம்)
2 x மருத்துவமனை ஆய்வாளர் (முழுநேரம்)
2 x மருத்துவமனை செவிலியர் நிபுணர் (முழுநேரம்)
3 x நிர்வாகிகள் (முழுநேரம்)

## 3. மாற்றத்திற்கான காரணம்

நோயாளிக்கு பாதுகாப்பான பராமரிப்பை அளிப்பதற்கு உதவுவதற்கான மருத்துவமனை அளுகை ஏற்பாடுகளுள் ஒன்றாக இது இருக்கும் என்கிற முக்கியமான காரணத்தினால் இந்த முன்மொழிவு நியாயப்படுத்தப்படுகிறது.

2014ன் துவக்கத்தில், க்ராய்டன் யூனிவர்சிட்டி ஹாஸ்பிட்டல் NHS ட்ரஸ்ட்டின் (CUH) மூத்த யூரோகைனகாலஜிஸ்ட் கன்சல்டன்ட் இந்தப் பிரிவுக்கு தலைமை வகிக்கவும், இந்த பிரிவின் பிரிட்டிஷ் சொசைட்டி ஆஃப் யூரோகைனகாலஜிஸ்ட் (BSUG) விண்ணப்பத்தில் உதவவும், தலைமை நிபுணராக செயல்படவும், முடிவுகளை எடுப்பதற்கு பொறுப்பேற்கவும் மருத்துவமனை இயக்குநராக (CD) பகுதிநேர அடிப்படையில் நியமிக்கப்பட்டார்.

மருத்துவமனை இயக்குநர் மே 2015ல் வெளியேறியதால் இந்த சேவையைத் தொடர முடியாமல் போனது. இந்தக் குழுவால் அதன் BSUG (பிரிட்டிஷ் சொசைட்டி ஆஃப் யூரோகைனகாலஜிஸ்ட்) விண்ணப்பத்தை முடிக்க இயலாமலும் போனது. BSUG அங்கீகாரம் சிறந்த வழக்கமாகக் கருதப்படுகிறது.

உகந்த நிர்வகிப்பை உறுதிசெய்ய உதவ சிகிச்சைக்கு முன், மிகவும் அதிகமாக செயல்படும் சிறுநீர்ப்பை மற்றும் அழுத்த சிறுநீர் ஒழுக்கு ஆகியவற்றிற்கான அனைத்து ஊடுறுவும் சிகிச்சைகளும் MDTயில் (மல்ட்டி-டிசிப்ளினரி குழு) கலந்துரையாடப்பட வேண்டும் என்று 2013 NICE சிறுநீரொழுக்கு வழிகாட்டுதல் பரிந்துரைக்கிறது. வெளிப்புற மருத்துவமனை இயக்குநர் (CD) இல்லாமல், தொடர் மருத்துவமனை ஆளுகை, தலைமை மற்றும் உறவு பிரச்னைகள் துறைக்குள் தீர்க்கப்படாமல் இருப்பதால், பிரிவின் உகந்த தலைமையையும், உள் MDTயின் திறமிக்க பதவியை முன்னெடுத்துச் செல்லவும் தலைமை மருத்துவர் யாரும் அந்த இடத்தில் இல்லை என்பது தெரிகிறது.

தென் மேற்கு லண்டன் பகுதியில் மருத்துவமனைத் தலைமை பதவிக்கு ஆட்களைச் சேர்க்க போதுமான அனுபவமும் மூப்பும் உள்ள, யூரோகைனகாலஜிஸ்ட் மாற்று கன்சல்டன்ட் பலரை பெண்களுக்கான சேவைகள் இயக்ககம் திறனாய்வு செய்தது. ஆயினும் பொருத்தமான நபர்கள் அடையாளம் காணப்படவில்லை. மூத்த மருத்துவமனைத் தலைமை இல்லாததால் இந்த சேவையில் எந்த மூத்த மருத்துவரின் மருத்துவமனை கண்ணோட்டமும் கிடையாது. மேலும், சிகிச்சைத் திட்டங்கள் கலந்துரையாடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்படும் செயல்படத்தக்க பலதுறை குழு சந்திப்பை (MDT) நடத்த இயலாது. எனவே, இதில் மருத்துவமனை ஆளுகை அபாயம் உள்ளது. மேலும், இது தற்போதைய வழிகாட்டுதல்களுக்கு இணங்கி இல்லை.

புதிய பரிந்துரைகளுக்கு சேவை அளிப்பதற்கான மிகவும் வழக்கத்திற்கு மாறான முடிவை ட்ரஸ்ட் எடுத்து, திங்கட்கிழமை, ஜூன் 8, 2015 முதல் மாற்று பராமரிப்பு வழங்குநரை நோயாளிகளுக்கு அளிக்க வேண்டும். அது வரை, விருப்பத்தேர்வுகள் மற்றும் சேவைப் பற்றிய முழுமையான திறனாய்வு இருக்கும்.

## 4. சேவை தற்காலிக நிறுத்தம்

அருகாமையில் உள்ள ட்ரஸ்டில் மருத்துவமனை தலைவர் இருப்பார் என்பதால், இந்த பராமரிப்பைத் தொடர்வதற்கு CUHக்கு இந்த சேவையை இடமாற்றம் செய்வது சிறந்த வாய்ப்பாக இருக்கும் என்று முடிவுசெய்யப்பட்டது. CUHல் யூரோகைனகாலஜியின் துணைச் சிறப்பு பிரிவு, அதன் BSUG அங்கீகாரத்தை அடைந்துள்ளது. மேலும், இது மாறுபட்ட, மிகவும் நீடித்திருக்கக்கூடிய பணியாளர் முறையையும் கொண்டுள்ளது.

இந்த தற்காலிக நிறுத்தத்தால் பாதிக்கப்படும் அனைத்து நோயாளிகளும் தொடர்புக் கொள்ளப்பட்டனர், அவர்களின் பராமரிப்பு CUHக்கு மாற்றப்படும் என்று கூறப்பட்டது. SGUHக்கு அவர்கள் தற்போது செல்வது தொடர்பாக CUH அமைந்துள்ள இடம் குறித்து அவர்களுக்கு இருக்கும் சந்தேகத்தை வெளிப்படுத்தி பல கடிதங்களை இந்த சேவைப் பிரிவு பெற்றுள்ளது. CUHக்கு தங்களின் சிகிச்சையை இடமாற்றிக் கொள்ள விரும்பாத நோயாளிகளுக்கு அந்தப் பகுதிக்குள் உள்ள மாற்று வழங்குநர்கள் குறித்து அறிவுறுத்தப்பட்டுள்ளது. அவர்களின் பொது மருத்துவர் (GP) மூலமாக இவர்கள்

பரிந்துரைக்கப்படலாம். CUHல் பராமரிப்பு ஏற்பாடு தொடர்பாக எந்த பிரச்னையும் பதிவு செய்யப்படவில்லை. நல்ல மாற்றீடான தரமான சேவை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்பதில் ட்ரஸ்ட் நம்பிக்கைக் கொண்டுள்ளது. CUHக்கு பராமரிப்பை இடமாற்றம் செய்வது தொடர்பாக எந்த கடுமையான நிகழ்வுகளும் பதிவு செய்யப்படவில்லை.

## 5. பணியாளர் கலந்தாய்வு

சேவையின் திறனாய்வைத் தொடர்ந்து, பின்வரும் விருப்பத்தேர்வுகள் பரிசீலனை செய்யப்பட்டன:

- எதுவும் செய்யாமல் இருப்பது - நோயாளிகளுக்கு நாங்கள் அளிக்கும் பராமரிப்பின் தரத்தையும் பாதுகாப்பையும் சமரசம் செய்யாமல் துணைச் சிறப்பு யூரோகைனகாலஜி சேவையை மீண்டும் துவங்குவது உகந்த விருப்பத்தேர்வாக கருதப்படவில்லை.
- முழுநேர மருத்துவமனை இயக்குநர் பதவிக்கு மாற்றீடு - முழு நேர CD பதவிக்கு மாற்றீடு என்பது உகந்த விருப்பத்தேர்வாகக் கருதப்படவில்லை. இதற்கு மற்ற துணைச் சிறப்பு யூனிட்களுக்கு முரண்பாடாக ஆளுகை பொறுப்பின் ஏற்கத்தகாத எதிர்பார்ப்பு, இந்த பதவிக்கு நியமிப்பதற்கு இது போன்ற நபர்களின் கிடைக்குந்தன்மை மற்றும் மீண்டும் மீண்டும் ஏற்படும் நிதிப்பற்றாக்குறையை மீறிய இந்தப் பதவியின் தொடர் செலவழுத்தம் ஆகியவைதான் காரணம்.
- துணைச் சிறப்பு யூரோகைனகாலஜி சேவையை மூடுவது - விரும்பும் விருப்பத்தேர்வாக முன்மொழியப்பட்டுள்ளது.

துணைச் சிறப்பு யூரோகைனகாலஜி சேவைகளை மூடுவது ட்ரஸ்டின் மாற்ற நிர்வாகக் கொள்கைக்கு ஏற்ப ஒரு உள் பணியாளர் கலந்தாய்வாக ஜூலை 29, 2015 முதல் ஆகஸ்டு 31, 2015 வரை முன்னெடுத்துச் செல்லப்பட்டுள்ளது.

இந்த முன்மொழிவு நேரடியாக பாதிக்கப்படும் பத்து பணியாளர்கள் மற்றும் பிரதிநிதிகளுடனான விருப்பமுள்ளவர்கள் எவரும் பங்கேற்கும் சந்திப்புகளில் வழங்கப்பட்டது. ஐந்து பணியாளர்கள், இந்த முன்மொழிவு எப்படி தங்களிடமும் துறையிலும் தாக்கத்தை ஏற்படுத்தும் என்பது பற்றி கலந்துரையாட தனிப்பட்ட சந்திப்புகள் வேண்டுமென்று கேட்டுக் கொண்டனர்.

பணியாளர் கலந்தாய்விற்கு பதிலளிக்கும் வகையில் இரண்டு மாற்று முன்மொழிவுகளை பாதிக்கப்பட்ட பணியாளர்கள் சமர்ப்பித்தனர்.

i. யூரோகைனகாலஜி துணைச் சிறப்பு சேவைப் பிரிவு தொடர வேண்டுமானாலும், இரண்டு கன்சல்டன்ட்களும் விரிவான மகளிர் நலவியல் சேவையின் ஆளுகையின் கீழ் இரண்டு தனித்தனி குழுக்களாக இயங்க வேண்டும்.

ii. யூரோகைனகாலஜி துணைச் சிறப்பு சேவை ஒருங்கிணைந்த கூபகத் தள குறைபாடு மற்றும் சிறுநீரை அடக்குதல் சேவையாக மீண்டும் அமைக்கப்படும். மருத்துவமனை இயக்குநரின் புதிய பதவி யூரோகைனகாலஜி மற்றும் பெண் சிறுநீரியல் பராமரிப்புக் குழு என இரண்டிலும் தலைமை வகிக்குமாறு இருக்கும்.

**பணியாளர் கலந்தாய்வினால் பெறப்பட்ட முடிவுகள்**

சாத்தியமான விருப்பத்தேர்வுகளாக ட்ரஸ்டால் இந்த இரண்டு மாற்று முன்மொழிவுகளில் எதுவும் ஆதரிக்கப்படவில்லை. யூரோகைனகாலஜி என்பது சிகிச்சை வகையாக இல்லாமல் மகளிர் நலவியலின் துணைச் சிறப்புப் பிரிவாக உள்ளது, எனவே தனிப்பட்ட கன்சல்டன்ட் குழு முறையின் கீழ் நோயாளிகளை நிர்வகிக்க இயலாது என்பதால் முன்மொழிவு (i) ஆதரிக்கப்படவில்லை. துணைச் சிறப்பு பிரிவாக யூரோகைனகாலஜி தனிப்பட்ட ஆளுகை ஏற்பாடுகளை நிறைவேற்றி, ஒரு தனி

பிரிவாக இயங்க வேண்டும். புதிய சேவையைத் துவங்க உத்திப்பூர்வ திறனோ, வளஆதாரங்களோ இல்லாததால் முன்மொழிவு (ii) நீர்ப்பாதையியல் பராமரிப்புக் குழுவால் ஆதரிக்கப்படவில்லை.

துணைச் சிறப்புப் பிரிவு தற்காலிகமாக நீக்கப்பட்டுள்ளது.

## 6. முடிவு மற்றும் முன்மொழிவு

யூரோகைனகாலஜியின் துணைச் சிறப்பு பிரிவால் குறைந்த செலவில் உயர்தர சேவைகளை வழங்கக்கூடிய பிரிவாக இருக்க இயலாது என்று கருதப்படுகிறது. எனவே, இந்த யூனிட் மூடப்படுகிறது என்றும், இந்த சேவை வசதிகள் CUHக்கு மாற்றப்படும் என்றும் முன்மொழியப்பட்டுள்ளது.

## 7. பொது கலந்தாய்வு நிகழ்முறை

பொது கலந்தாய்வு நிகழ்முறையின் ஒரு பகுதியாக துணைச் சிறப்பு/ வெளிப்புற பங்குதாரரின் நோயாளி பயனாளராக பதிலளிக்க உங்களுக்கு வாய்ப்பளிப்பதற்காக இந்த முன்மொழிவு வழங்கப்படுகிறது. கலந்தாய்வு நீட்டிக்கப்பட்டுள்ளது. இது அக்டோபர் 12 2015 அன்று துவங்கியது. இது இப்போது டிசம்பர் 4 2015 (உட்பட) அன்று முடிவடையும். அனைத்து கருத்துக்களும் மின்னஞ்சல் மூலமாக consultation@stgeorges.nhs.ukக்கு அனுப்பப்பட வேண்டும். பொருள் களத்தில் யூரோகைனகாலஜி (Urogynaecology) என்று எழுதவும்

## 8. செயலாக்க நிகழ்முறை மற்றும் முடிவு

இந்த காலத்தில் முன்மொழிவிற்கு பதிலாகப் பெறப்பட்ட அனைத்து கருத்துக்களும் ஏற்றவாறு பரிசீலனை செய்யப்படும். இந்த கலந்தாய்வை முடித்து, இதன் முடிவை ஜனவரி 2016ல் பணியாளர்களுக்கும் பொதுமக்களுக்கும் வழங்குவதுதான் இதன் நோக்கம்.